## பிரதமரால் அறிவிக்கப்பட்ட


# மூன்று குற்றவியல் சட்டங்களையும், மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்!

ஆங்கிலேயர் இந்திய நிலப்பகுதி முழுமையும் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தின் கீழ் முழுமையாகக் கொண்டு வந்த நிலையில் இங்கு நிலவிடும் குற்ற நடவடிக்கைகளை விசாரித்து வெளிப்படைத்தன்மையோடு எல்லோருக்கும் சமமான நீதி (Equity, Fairness and Transparency) வழங்க வேண்டும் என்ற குற்றவியல் அடிப்படை அம்சங்களை நோக்கமாகக் கொண்டு சட்ட அறிஞர் மெக்காலேயால் இந்திய தண்டனைச் சட்டமும் (Indian Penal Code) பின்னர் குற்றவியல் விசாரணை சட்டமும் (Criminal Procedure Code) பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி இந்தியாவில் அமல்படுத்தப்பட்டது. 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் (Indian Evidence Act) ஜேம்ஸ் ஸ்டீபனால் தொகுக்கப்பட்டு இந்தியாவின் நீதித்துறையில் நடைமுறைபடுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற சட்டமன்ற மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களில் தீர்மானங்கள் மூலமாக அவசியம் கருதி கடந்த சில காலகட்டங்களில் சில குறிப்பிட்ட பிரிவுகளில் மாற்றம் அல்லது திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

எனினும், இந்த மூன்று சட்டங்களும் தொடர்ந்து குற்ற நடவடிக்கைகளைத் தடுக்கவும், நடந்துவிட்டால் வெளிப்படைத் தன்மையோடு விசாரித்து, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கவுமான நடைமுறையை சட்டவரையறைக்குள் ஒழுங்குபடுத்துவதுதான் இந்த மூன்று சட்டங்களின் நோக்கமும், அமலாக்கமுமாகும்.

இந்த மூன்று சட்டங்களும் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வழக்கறிஞர்கள் மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் நன்கு அறிமுகமான சட்டங்களாகும். பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியில் 2023 ஆகஸ்ட் 11ஆம் தேதி அன்று, இந்த மூன்று குற்றவியல் தொடர்பான சட்டங்களையும் சமஸ்கிருதத்தில் மொழி மாற்றம் செய்து இந்திய தண்டனைச் சட்டத்தை (Indian Penal Code) "பாரதிய நியாய சந்கிட்டா" (Bharatiya Nyaya Sanhita BNS) என்றும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை (Criminal Procedurec Code) "பாரதிய நாகரிக் சுரக்ஸா சந்கிட்டா" (Baratiya Nagarik Suraksha Sangita BSNN) என்றும், இந்திய சாட்சியச் சட்டத்தை (Indian Evidence Act) "பாரதிய சாக்ஷிய பில்" (Bharatiya Sakshya Bill BSB ) என்றும் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், சில சட்ட பிரிவுகளில் மாற்றங்களையும் செய்து, அதற்கான தீர்மானங்களை நாடாளுமன்றத்திலே நிறைவேற்றி, அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாடாளுமன்ற நிலைக்குழுவிற்கு (Parlimentary Standing Committee) அனுப்பி, நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகளும் நிராகரிக்கப்பட்ட பின்னர், இந்த ஆண்டு ஜூலை திங்கள் முதல் நாள் இந்த மூன்று சட்டங்களும் நடைமுறைக்கு வருமென ஒன்றிய அரசு அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பைக் கண்டவுடன் தமிழ்நாட்டின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டங்களை ஆய்வு செய்தபின்னர், இந்த மூன்று சட்டங்களையும் அமல்படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும் என ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்ததோடு, அதற்கான காரணத்தையும் தெரிவித்துள்ளார்கள்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் இந்த மூன்று சட்டங்களை அமல்படுத்துவதை நிறுத்திவைக்காவிட்டால் நடைமுறையில் பல்வேறு இடர்பாடுகளையும், சங்கடங்களையும் குழப்பங்களையும் சந்திக்க நேரிடும் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த மூன்று சட்டங்கள் தொடர்பான மசோதாக்கள் கடந்த நாடாளுமன்றத்தில் விவாதங்களேயின்றி நிறைவேற்றப்பட்ட மசோதாக்களாகும். அது மட்டுமல்ல 146 நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்துவிட்டு, ஏகபோகமாக, விவாதத்திற்கே கிஞ்சிற்றும் வழியின்றி நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாக்கள்தான் சட்ட வடிவங்களைப் பெற்றிருக்கிறது. நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆலோசனைகள் (Parliamentary Standing Committee) முறையாக பரிசீலித்ததாகவும் தெரியவில்லை. இப்படி நாடாளுமன்றத்திலே விவாதிக்கப்படாமல், நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் உருவாகும் சாதக, பாதகங்களைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டங்கள் 2024ம் ஆண்டு ஜூலை ஒன்றாம் தேதி அமல்படுத்தப்படுமேயானால், குற்றவியல் நீதித்துறையில் மிகப்பெரிய குழப்பத்தையே உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

இந்த மூன்று சட்டங்கள் வரும் ஜூலை 1ஆம் தேதி அமல்படுத்தப்படுவது குறித்து பெரிதும் அச்சமடைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் மணிஸ் திவாரி அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில (The Indian Express) நாளேட்டில் "புதிய குற்றவியல் சட்டங்கள் மீண்டும் நாடாளுமன்ற விவாதத்திற்கு அனுப்பப்பட வேண்டும்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஓர் விரிவான கட்டுரையை 21.06.2024 அன்று எழுதி வெளியிட்டுள்ளார். (Nwqew Criminal Laws must Go - through Parliament Again) அதில் அவர் குறிப்பிடும் செய்திகள் தொடர்பாக அனைத்து மக்களும், அத்துடன் இந்தச் சட்டங்களை நீதிமன்றங்களில் கையாளுகின்ற அனைத்து வழக்கறிஞர்களும் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்புடைய செய்திகளையும், விமர்சனங்களையும் இந்தக் கட்டுரை மூலம் பொதுவெளியில் தெரிவிக்க விரும்புகிறேன்.

கட்டுரையாளர், முன்னாள் ஒன்றிய அரசினுடைய அமைச்சர், வழக்கறிஞர் மணிஸ்திவாரி அவர்கள் புதிதாக அமல்படுத்தவிருக்கின்ற மூன்று குற்றவியல் சட்டங்கள் குறித்து ஆய்வு செய்த அவரதுபார்வையின் உள்ளடக்கமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இந்திய தண்டனை சட்டத்தில் (IPC) 24 பிரிவுகளை நீக்கிவிட்டு, புதிய 23 பிரிவுகளைச் சேர்த்திருக்கிறார்கள். அதுபோன்று இந்திய சாட்சிய சட்டத்தில் (Indian Evidence Act) எந்த மாறுதலும் செய்யாமல் அப்படியே புதியச் சட்டமாக சமஸ்கிருத மொழியில் பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். குற்றவியல் நடைமுறை சட்டத்தில் (CRPC) 95 சதவீதத்திற்கு அப்படியே புதியச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது(BNSS). இந்த புதிய சட்டத்தின் மூலமாக எந்தவிதமான புதிய மாற்றங்களையும் செய்திடவில்லை. குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 173(3) மூலம், மூன்று ஆண்டுகள் முதல் ஏழு ஆண்டுகள் வரை தண்டனை வழங்கக்கூடியக் குற்றமாக இருக்குமெனில், முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டுமா என்பதை, தொடர்புடைய காவல்துறை அதிகாரியின் விருப்பத்திற்கு உட்பட்டது (Discretionary) என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தினால் சாதாரண ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பது கட்டுரையாளரின் கருத்தாகும்.

இந்த புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 187(3) புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. காவல்துறையினர் விசாரணைக்காக விசாரணைக் கைதியை 15 நாட்கள் விசாரணைக்கு எடுக்கலாம் என்று தெரிவித்திருப்பது ஏற்கனவேவுள்ள சட்டநடைமுறைகளுக்கு முரண்பட்டதாகும். இந்த மாற்றத்தின் மூலம் விசாரணை கைதி மேலும் பல சங்கடங்களை சந்திக்க நேரிடும். மேலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 43(3) உச்சநீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலுக்கு முரணாக கைதிகளுக்கு கைவிலங்கு போடுகின்ற அதிகாரம் காவல்துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த முறையும், மனித உரிமைகளுக்கும் சுயமரியாதைக்கும் முரண்பட்டதாகும். இந்திய தண்டனைச் சட்டத்தில் (IPC) தேசத் துரோகம் (Sedition) என்ற அந்த பிரிவு நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக 152வது பிரிவு புதிய சட்டத்தில் (BNS) சேர்க்கப்பட்டுள்ளது. இந்த பிரிவு மறைமுக தீவிரவாத குற்றநடவடிக்கைகள், பிரிவினையைத் தூண்டும் கருத்துக்கள், செயல்பாடுகள்,

இந்திய நாட்டின் இறையாண்மையையும், நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் ஒற்றுமையையும் சீர்குலைக்கும் நடவடிக்கையாக இருந்தாலும், அல்லது ஆயுதமேந்திய போராட்டங்களுக்கு மக்களைத்தயார்படுத்துதல் ஆகிய உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், அவர்கள் மீது 152 வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை காவல்துறையினருக்கு, இந்தப் பிரிவு வழங்குகிறது. இந்தச் சட்டப்பிரிவு வழங்கும் அதிகாரத்தின் மூலம் அரசியல் கட்சிகளின் மீதும், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மீது அரசியல் உள்நோக்கத்தோடு குற்ற வழக்குகள் தொடர்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

மேலும், இந்த புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள் மூலம், பல்வேறு குழப்பங்களும், குளறுபடிகளும் எதிர்பாராத வகையில் உருவாவதற்கான வாய்ப்புகள் நிரம்ப உள்ளன என்பதை யாராலும் மறுக்கவியலாது. புதிதாக இந்த ஆண்டு ஜூலை முதல் தேதி செயல்பாட்டிற்கு வருமென அறிவிக்கப்பட்ட மூன்று குற்றவியல் சட்டங்களும் எத்தகைய சூழ்நிலையில் நிறைவேற்றப்பட்டது என்பதை கட்டுரையின் முன் பகுதியில் விளக்கியுள்ளோம். இப்பொழுது இந்த ஆண்டு ஜூன் ஒன்பதாம் தேதி தனிப் பெரும்பான்மையோடு பாரதிய ஜனதாக் கட்சியைச் சார்ந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களும், அவரது அமைச்சரவை சகாக்களும் ஆட்சியமைக்கவில்லை. மாறாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDA) நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதம அமைச்சராக நரேந்திரமோடியும், மற்றைய அமைச்சர்களும் பொறுப் பேற்றுள்ளனர்.

எனவே, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக, கடந்த முறையும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்களா என்று அறுதியிட்டுக்கூறவியலாது. இப்பொழுது, பல புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசிய ஜனநாயக கூட்டணியில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே, இந்த சூழ்நிலையில் கடந்த 17வது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் இந்த மூன்று குற்றவியல் சட்டங்களை புதிய நாடாளுமன்றத்திற்கு முன் பரிசீலனைக்கு வைக்காமல் நேரடியாக ஜூலை 1ஆம் தேதி அமல்படுத்தப்படுவது எந்த வகையில் நியாயத்தின் பாற்பட்டதாகக் கருத முடியும். தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் (NDA) இந்த நடவடிக்கை முற்றிலும் ஜனநாயக மாண்புகளுக்கும், மரபுகளுக்கும் முரண்பட்டது மட்டுமல்லாமல் மிக மோசமான முன்னுதாரணமாகவும் அமையும். இந்த மூன்று குற்றவியல் சட்டங்களை ஜூலை 1ஆம் தேதி அமல்படுத்துவது இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கத்திற்கும், ஜனநாயக நடைமுறைகளுக்கும் முற்றிலும் முரண்பட்டதாகவே இருக்க முடியும்.

இன்று நரேந்திரமோடி அவர்களை பிரதம அமைச்சராக தேர்ந்தெடுத்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் (NDA) சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் இந்த புதிய குற்றவியல் சட்டங்களை ஒட்டுமொத்தமாக ஆட்சேபனையின்றி ஏற்றுக் கொள்கிறார்களா? என்பதை பரிசீலிக்கும் அடிப்படையிலாவது, இந்த மூன்று சட்டங்களையும், புதிய 18வது நாடாளுமன்றத்திலே வைக்கப்பட வேண்டுமா? வேண்டாமா? என்பதை நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மூன்று குற்றவியல் சட்டங்களும், பாரதிய ஜனதாக் கட்சியின் தனிப் பெரும்பான்மையோடு இருந்த, கடந்த 17வது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகச் சொல்லப்படும் சட்டங்கள். இந்த 18 வது புதியதாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதாக் கட்சிக்கு தனிப் பெரும்பான்மை இல்லை என்பதை நாடறியும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளோடு சேர்ந்துதான் பிரதமர் நரேந்திரமோடியால் ஆட்சியமைக்க முடிந்திருக்கிறது. எனவே கடந்த 17ஆவது நாடாளுமன்றகூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகின்ற, இந்த மூன்று குற்றவியல் சட்டங்களையும் 18 ஆவது நாடாளுமன்றத்தில் அதுவும் கூட்டணி ஆட்சியமைத்து செயல்படும், இந்தக் காலகட்டத்தில் மூன்று மிக மிக்கியமான குற்றவியல் சட்டங்களை அமல்படுத்த முயற்சிப்பது சட்டப்படியோ, தார்மீக நியாயங்களின் அடிப்படையிலோ ஏற்புடையதாக இல்லை.

எனவே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் விடுத்த அறிக்கையின் அடிப்படையிலும், இந்திய ஒன்றியத்தின் முன்னாள் அமைச்சர், கட்டுரையாளர் மணிஷ்திவாரி அவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையிலும், இந்த மூன்று குற்றவியல் சட்டங்களை புதிய நாடாளுமன்றத்தினுடைய பார்வைக்கும் பரிசீலனைக்கும் உட்படுத்தி, நாடாளுமன்றத்தினுடைய முடிவிற்கேற்ப அடுத்தக்கட்ட பணிகளை மேற்கொள்வதுதான் இன்றைய பிரதமர் நரேந்திரமோடி அவர்களுடைய பணியாக இருக்க வேண்டுமே தவிர எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பாணியில் இந்த சட்டங்களை அமல்படுத்துவது முறையாகது. ஆனாலும், மக்களின் விருப்பத்திற்கு முரண்பட்டு, அவசரக்கோலத்தில் அமல்படுத்தினால், அதனால் உருவாகும் விளைவுகளுக்கும் பிரதமர் நரேந்திர மோடி தான் பொறுப்பேற்க வேண்டும்.

## இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல்கொடுத்த

# மாபெரும் அரசியல் ஆளுமை சம்பந்தன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

**சென்னை, ஜூலை 2-**

**"இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக தன் வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமை சம்பந்தன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் மரியாதையைப் பெற்ற அரும்பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் சம்பந்தன் அவர்கள். இறுதி மூச்சு வரையிலும் தமிழ்மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார், செயல்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரைநூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வந்தன. இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் அவர்கள் போராடி வந்தார்.

**தலைவர் கலைஞரின் நண்பர்!**

இந்தியாவோடும் தமிழ்நாட்டுடனும் மிகச் சிறந்த நட்புறவை சம்பந்தன் அவர்கள் பேணி வந்தார். தலைவர் கலைஞர் அவர்களின் நண்பராகவும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் பல முறை அவரைச் சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

2015-ஆம் ஆண்டில் சம்பந்தன் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, "எனது அருமை நண்பர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பிறகு, தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத் தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவுகாலம் ஏற்படாதா என்று நீண்ட நாட்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையைத் தருகிறது" என்று முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

2016-ஆம் ஆண்டு 13-ஆவது முறையாகத் தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பந்தன் அவர்களும், "இதுவொரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். இலங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு உங்களுடைய ஆக்கப்பூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்" என வாழ்த்து தெரிவித்திருந்தார்.

**தமிழ்ச் சொந்தங்களுக்கு பேரிழப்பு!**

ஈழத்தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய சம்பந்தன் அவர்களின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத் தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் கனவுத் திட்டமான

# 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 25,888 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!

## ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வரை சம்பளம்: 'தி இந்து' நாளேடு புகழாரம்!

சென்னை, ஜூலை 2 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 25,888 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வரை சம்பளம் கிடைக்கும் வண்ணம் வேலை கிடைத்துள்ளது.

இதுகுறித்து 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் நேற்று (1.7.2024) செய்தி வெளியாகி உள்ளது.

"நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்று 'தி இந்து' நாளிதழில் வெளியான செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓலா எலக்ட்ரிக் பாலிடெக்னிக் மாணவர்களை எலக்ட்ரிக் வாகன ஆலைகளில் சேரும் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு 2 லட்சம் முதல் 8 லட்சம் வரை சம்பளம் வழங்குவதாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக தரவுகள் காட்டுகின்றன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 25,888 மாணவர்கள், மாநில அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம், ஜூன் 18, 2024 நிலவரப்படி பல்வேறு துறைகளில் வேலை பெற்றுள்ளனர்.

"இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் லாபகரமான வேலைகளைப் பெறுவதற்கு அரசாங்கம் உதவுகிறது. இதுவரை 252 கல்லூரிகள் வேலை வாய்ப்பு இயக்கத்தில் பங்கேற்றுள்ளன. வேலை வாய்ப்புகள் இன்னும் நடந்து வருவதாகவும், சுமார் 58,000 மாணவர்கள் தங்கள் படிப்பின் இறுதி ஆண்டில் படித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு, ஓலா எலக்ட்ரிக் தனது எலக்ட்ரிக் வாகன (EV) ஆலைகளுக்கு பாலிடெக்னிக் மாணவர்களைச் சேர்க்கிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) படி, நிறுவனங்கள் அதன் ஆலைகளுக்கு




புதிய விண்ணப்பதாரர்களை நியமிக்க திட்டமிட்டுள்ளது. தற்போது, தொகுக்கப்பட்ட வளாக வேலை வாய்ப்பு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன, தற்போது, 120க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள், அசெம்பிளி லைன்கள், லாஜிஸ்டிக்ஸ், ஆபரேஷன்ஸ் மற்றும் ஸ்டோர்ஸ் போன்றவற்றில், நுழைவு நிலை நிலைகளில் பணியமர்த்தப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அசன்ட்சர், அமேசான், அசோக் லேலண்டு, கேட்டர் பில்லர் இந்தியா, டைகின், டெல் ஃபி, டி.வி.எஸ். பி.ஓ.எய்.சி.எச்., எய்ச்சர், போர்டு, எச்.சி.எல்., டெக் மற்றும் எல் அண்டு ட்டி உள்ளிட்ட நிறுவனங்களும் பாலிடெக்னிக் மாணவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. சில வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் பதிவு செய்யப்பட்டன.

இந்த மாணவர்களுக்கான சம்பளப் பேக்கேஜ்கள் வருடத்திற்கு 2 லட்சம் முதல் 8 லட்சம் வரை, நோக்கியா வழங்குகிறது.

ஜே.இன்னசென்ட் திவ்யா, (மேலாண் இயக்குநர்) இதுபற்றி கூறியதாவது:-

தொழிற்சாலைகள், கடை நிலை நிபுணத்துவம் கொண்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை விரும்புகின்றன.

"இந்த ஆண்டு, பொறியியல் கல்லூரிகளில் எங்கள் பணியமர்த்தலைக் குறைத்து, அதிக பாலிடெக்னிக் மாணவர்களை தேர்வு செய்தோம். இந்த மாணவர்கள் அதிக நடைமுறை அமர்வுகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள், மேலும் முதல் நாளிலிருந்தே வேலை தளத்தில் நிறுத்தப்படலாம். இது பயிற்சி செலவைக் குறைக்க உதவுகிறது..." என்று குறிப்பிட்டார். இதில் பங்கேற்ற நிறுவனங்களில் ஒன்று, கூறியது:

இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு டிஜிட்டல் திறன்கள் (மெய்நிகர்), கட்டிடத் தகவல் மாடலிங், AR மற்றும் VR ஐப் பயன்படுத்தி தொழில்துறை மெட்டாவேர்ஸ், இண்டஸ்ட்ரி 4.0 மற்றும் பிரிண்டட் சர்க்யூட் போர்டு (பிசிபி) வடிவமைப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு 'தி இந்து' நாளிதழில் செய்திக் கட்டுரை வெளியாகி உள்ளது.

## விக்கிரவாண்டி தொகுதியில்

# கழக வேட்பாளர் சிவாவை ஆதரித்து பிரச்சாரம்!

## தா.உதயசூரியன் - ஆ.அங்கையற்கண்ணி வாக்கு சேகரித்தனர்!

*விழுப்புரம், ஜூலை 2 -*

*பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைப்படி, விழுப்புரம் மாவட்டம் விக்கிர வாண்டி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, காணை வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கக்கனூர் ஊராட்சியில் பாகம் எண் 52, 53, 54, 55 ஆகிய பகுதிகளில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினருமான தா உதயசூரியன், மாநில மகளிரணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் கூட்டணி கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகளும் வீதி வீதியாக வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.*